# DEPOSITION OF WITNESS

(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : C.C. 23/2025 | Date | : 24.02.2026 |
| Deposition of Witness for | : அ.சா.2 | Taluk | : |
| Name | : திரு. பாபு | Calling | : |
| Father / Husband Name | : திரு. பழனிசாமி | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 24.02.2026.

(எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்.)

**அரசு தரப்பு முதல் விசாரணை :**

1) நான் சங்ககிரி தாலுக்கா, காகாபாளையத்தில் குடியிருந்து துணி வியாபாரம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. கடந்த 3 வருடங்களுக்கு முன்பாக காகாபாளையத்தில் வைத்து ஒரு விபத்து ஏற்பட்டதாக ஒருவர் எனக்கு தகவல் கூறினார். மேற்படி விபத்தில் ஒருவர் இறந்ததாக நான் தெரிந்து கொண்டேன். இது தொடர்பாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:–**

1. விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்று சொன்னால் சரிதான். விபத்து சம்பவம் எவ்வாறு நடந்தது என்றும் யாரின் அஜாக்கிரதையால் நடந்தது என்றும் எனக்கு நேரடியாக தெரியாது. சம்பவ

இடத்திற்கு நான் செல்லவில்லை என்று சொன்னால் சரிதான். எதிரியை இதற்கு முன்னர் நான் பார்த்தது இல்லை. எதிரிக்கும் வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்று சொன்னால் அதைப் பற்றி எனக்கு தெரியாது.

<u>**மறுவிசாரணை:–**</u> இல்லை.

Witness- Sd/- Babu

Typed to my dictation in open court read over and explained to the witnesses in the presence of the accused and admitted by him to be correct.

Sd/- D. Sivakumar,
Judicial Magistrate No.II,
Sankari.

# DEPOSITION OF WITNESS

(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : C.C. 23/2025 | Date | : 24.02.2026 |
| Deposition of Witness for | : அ.சா.3 | Taluk | : |
| Name | : திரு. தங்கராசு | Calling | : |
| Father / Husband Name | : திரு. கணேசன் | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 24.02.2026.

**(எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்.)**

**அரசு தரப்பு முதல் விசாரணை :**

1) நான் சங்ககிரி தாலுக்கா, காளிப்பட்டியில் குடியிருந்து பேக்கரியில் டீ மாஸ்டராக பணிபுரிந்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது தான். **(மேற்படி பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** நான் கையொப்பம் செய்தபோது சுரேஷ் என்ற நபரும் கையொப்பம் செய்தார். ஒரு விபத்து வழக்கு சம்மந்தமாக போலிசார் வரைபடம் வரைந்து என்னிடம் கையொப்பம் பெற்றார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-**

1. போலிசார் ஏற்கெனவே வரைந்து வைத்திருந்த வரைபடத்தில்

என்னிடம் கையொப்பம் பெற்றார்கள் என்று சொன்னால் சரிதான். போலிசாரிடம் நான் சம்பவ இடத்தை அடையாளம் காட்டவில்லை என்று சொன்னால் சரிதான். திரு. சுரேஷ் என்பவரும் ஏற்கெனவே வரைந்து வைத்திருந்த வரைபடத்தில் தான் கையொப்பம் செய்தார் என்று சொன்னால் சரிதான். போலிசார் எங்கள் இருவரின் முன்னிலையில் வைத்து வரைபடம் தயாரிக்கவில்லை என்று சொன்னால் சரிதான்.

**<u>மறுவிசாரணை:–</u>** இல்லை.

Witness- Sd/- Thangarasu

Typed to my dictation in open court read over and explained to the witnesses in the presence of the accused and admitted by him to be correct.

Sd/- D. Sivakumar,
Judicial Magistrate No.II,
Sankari.